**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை—2015—16 ஆம் நிதியாண்டில் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தில் காதொலிக் கருவிக்கென ஒப்பளிக்கப்பட்ட தொகையை 2014—15 ஆம் நிதியாண்டு கொள்முதல் செய்யப்பட்ட காதொலிக் கருவிகளுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கிய மாற்றுத் திறனாளிகளுக்கு மாநில ஆணையரின் செயலுக்கு பின்னேற்பாணை வழங்கி— ஆணை— வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.39

நாள்: 31—05—2016
துன்முகி, வைகாசி 18,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.74, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28—11—2014.
2. அரசாணை(2D) எண்.03, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 27—07—2015.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2022/ இவாததி/ 2014, நாள் 17.03.2016.

-------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி 2014—2015 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு, இலவசமாக உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும், இலவச உதவி உபகரணங்கள் வாங்கி வழங்குவதற்கு, ரூ.75,00,000/— நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2015—2016 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு, விலையில்லா உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும், விலையில்லா உதவி உபகரணங்கள் வாங்கி வழங்குவதற்கு, ரூ.75,00,000/— நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், 2015—16 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வாங்கி வழங்கும் திட்டத்தின் கீழ் காதொலிக் கருவிக்கென ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.1,92,360/— ஐ 2014—15 ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட 229 காதொலிக் கருவிக்களுக்கான தொகையான ரூ.1,92,360/—ஐ ALPS

International Private Limited நிறுவனத்திற்கு வழங்கியமைக்கு பின்னேற்பாணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த பின், அதனை ஏற்று, 2015–16 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வாங்கி வழங்கும் திட்டத்தின் கீழ் காதொலிக் கருவிக்கென ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.1,92,360/–(ஒரு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து முந்நூற்று அறுபது மட்டும்)ஐ 2014–15 ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட 229 காதொலிக் கருவிக்களுக்கான தொகையான ரூ.1,92,360/– (ஒரு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து முந்நூற்று அறுபது மட்டும்)ஐ ALPS International Private Limited நிறுவனத்திற்கு வழங்கிய மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் செயலுக்கு பின்னேற்பாணை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.30643/நிதி(சந)/2016, நாள் 26.05.2016–ன் இசைவுடன்வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநிலஆணையர், சென்னை–78.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை தலைமைக் கணக்காயர்,சென்னை–18.
முதன்மை தலைமைக் கணக்காயர், (இருப்பு) தலைமைச் செயலகம், சென்னை–9.
முதன்மை தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**நகல்:-**
நிதி (சந) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.